செ.வெ.எண்.39 நாள். 29.11.2011

**நாமக்கல் மாவட்ட பேரூராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான அறிமுக பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பயிற்சி கையேட்டினை வெளியிட்டார்.**

நாமக்கல் மாவட்ட பேரூராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான அறிமுக பயிற்சி வகுப்பு கோல்டன்பேலஸ் ஹோட்டலில் இன்று (29.11.11) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்து கையேட்டினை வெளியிட்டு பேசியதாவது: புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் தங்களின் கடமைகள், அதிகாரங்கள், உரிமைகள், பொறுப்புகள் குறித்து முழுமையாக தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். பேரூராட்சிகளின் நிதியை விதிமுறைகளின்படிதான் செலவழிக்க வேண்டும். விதிமுறையை மீறி செயல்பட்டால் தணிக்கையில் கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பேரூராட்சி தலைவர்கள் தங்கள் பகுதியில் நிறைவேற்றப்படவேண்டிய முக்கியமான திட்டப்பணிகள் குறித்து அரசுக்கு உரியமுறையில் கருத்துக்களை அனுப்பி வைக்க வேண்டும். பேரூராட்சியின் நிதி ஆதாரங்களான சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி, நூலகவரி ஆகியவைகளை முனைப்புடன் செயல்பட்டு வசூல் செய்ய வேண்டும். இவ்வாறு செயல்பட்டால் பேரூராட்சி நிர்வாகத்தை சிரமமின்றி நடத்திடலாம். திட்டப்பணிகள் அனைத்தையும் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்திட வேண்டும். பேரூராட்சி தலைவர்கள் பணிகள் நடைபெறும்போது பணிகளின் தரத்தினை ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். பணிகளை தாமதமில்லாமல் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தப்பயிற்சியில் கூறப்படும் அனைத்து தகவல்களையும் முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். பயிற்சியில் சொல்லப்படும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பேரூராட்சி நிர்வாகத்தை சிறப்புடன் நிர்வகிக்கவேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேரூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்களுக்கான பயிற்சி கையேட்டினை வெளியிட்டார்.

இப்பயிற்சி வகுப்பில் மன்றத்தின் கடமை பொறுப்புகள், செயல்பாடுகள், நிதி ஆதாரம், கணக்குகள் பராமரித்தல், மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல், சீரான குடிநீர் விநியோகம், சுற்றுச்சூழல் மேம்பாடு, தெருவிளக்கு பராமரித்தல், பிறப்பு, இறப்பு பதிவுகள் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார், சேலம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திரு.ஆர்.நடேசன், உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் திரு.கே.எஸ். கருணாகர பன்னீர்செல்வம், நகர் புணரமைப்புத்துறை துணை இயக்குநர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ஓய்வு திரு.க.பாலசுப்பிரமணியன், பேரூராட்சி தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் பேரூராட்சி செயல்அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,நாமக்கல்.